ஸ்ரீ தந்வந்த்ரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

விரோதிகிருது
மாசி

MARCH
1972

தொகுதி 34
பகுதி 3

Vol. 34
No. 3

ஆசிரியர் & பிரசுரகர்த்தா :

வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

ஸ்ரீ ராமசர்மாவும், மஹாமண்டலமும், வைத்திய சந்திரிகையும் ...	41
சிறந்த கர்மவீரர் ...	43
எனது நண்பர் ...	45
நினைவில் நிலைத்தவர் ...	48
பெரியவருடன் 15 நிமிடங்கள் ...	52
அஞ்சலி ...	54
நண்பர் ஸ்ரீ P. S. ராமசர்மா ...	57

கார்யாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

THE ARYA VAIDYA SALA KOTTAKAL

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ. 27
(ஆபீஸ்) போன் நெ 61
மானேஜர் (வீடு) போன் நெ. 26

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற
ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்

31-A, சின்னகடைத் தெரு,

திருச்சிராப்பள்ளி-2.

போன் எண் : 4202.

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பது ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு :

ஸௌபாக்கிய ரஸாயனம்

ஜீர்ண சக்தி, ரத்த விருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5.

பயஸ்யா

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5.

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப் பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON, GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M/s. KALIA BROTHERS (Regd.)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram : KALIA

Phone : Office - 3232
Resi. - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ, கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்)

தந்தி : KALIA

போன் : ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி : "அம்ருதம்" P. B. No. 1382. போன் : 26006

தி ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD · AVP

உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.

எங்களுடைய கிளைகள் :

1.	23 B, பூஸா ரோடு, புது டில்லி :	போன் ;	585687
2.	மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,,	2984
3.	கௌடியா மடத்தெரு, மதராஸ்-14	,,	85752
4.	வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-18	,,	32219
5.	பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1	,,	92
6.	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,,	195
7.	கடைவீதி, பொன்னானி	,,	41
8.	ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1	,,	378
9.	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,,	87
10.	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு		
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18	,,	33758
12	இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2	,,	4891
13.	229, ராஜவீதி, கோயமுத்தூர்-1	,,	33988
14.	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2		
15.	No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி)		

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங்ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும்:

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00; 12 ML. ரூ 3–75

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE: 5441 வீடு போன்: 6074

[1936-ல் திறுவப்பட்டது.]

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 34	விரோதிகிருது மாசி	பகுதி 3
Vol. 34	1972 மார்ச்	No. 3

॥ श्री धन्वन्तरये नमः ॥

ஸ்ரீ ராமசர்மாவும் மஹாமண்டலமும் வைத்திய சந்திரிகையும்

மஹாமண்டலத்தின் முன்னுள் தலைவரும் வைத்திய சந்திரிகை ஆசிரியருமான ஸ்ரீராமசர்மா பிப்ரவரி 7-ம்தேதி காலமானதைக் கடைசிச் செய்தியாகச் சென்ற இதழில் தெரிவித்து எமது அஞ்சலியைச் செலுத்தினேம். மஹாமண்டலத்திற்குப் பெருத்த பலமாகி நின்று தாங்கிவந்த அந்த மஹான் மறைந்ததால் ஏற்பட்டுள்ள இடைவெளியை காலமே நிறைவு செய்யவல்லது.

மஹாமண்டலம் சென்னையில் அகிலபாரத ஆயுர்வேத மஹா ஸம்மேளனத்தின் தமிழ்நாட்டுக் கிளையாக திராவிட வைத்ய மண்டலம் என்ற பெயரில் 1916ல் ஆரம்பிக்கப்பெற்றது. 1934ல் அதன் ஆருவது மகாநாடு திருச்சியில் நடைபெற்றது. அதிலிருந்தே மஹாமண்டலத்துடன் ஸ்ரீ சர்மாவிற்குத் தொடர்புண்டு. 1944ல் கரூரில் காப்டன் ஸ்ரீ G. ஸ்ரீனிவாஸ மூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மஹாநாட்டில் மஹாமண்டலப் பொதுக் காரியதர்சி ஆகி 1947 வரை இருந்தார். மறுபடியும் 1950-51ல் பொதுக்காரியதரிசியாக ஆனுர். 1952ல் புதுக்கோட்டையிலும் 1953ல் திருவாரூரிலும் 1955ல் சேலத்திலும் நடந்த மகாநாடுகளில்

மஹாமண்டலத்தலைமைப்பதவி ஏற்றார். மஹாமண்டலத்தின் சேலம் ஜில்லாக்கிளையை உருவாக்கிச்செவ்வனே நடக்கச்செய்த பெருமை இவருக்கு உண்டு. மஹாமண்டலம் அங்கத்தினர்களின் எண்ணிக்கையிலும் ஆக்கப்பணிகளிலும், அரசியல் தலைவர்களைப் பேட்டி கண்டு குறைகளை நிவிருத்தி செய்வதிலும் இவரது நிர்வாஹ காலத்தில் பாராட்டத்தக்க நிலையில் பணியாற்றிய தெனலாம்.

வைத்ய சந்திரிகா பத்திரிகை 32 ஆண்டுகளுக்குமுன் மதுரை பண்டிட் ஸ்ரீ நாராயணய்யங்கார் அவர்களால் கரூரில் ஆரம்பிக்கப் பெற்றது. அப்போது ஸ்ரீராமசர்மா ஸ்ரீ நாராயண அய்யங்கார் அவர்களிடம் சிஷ்யனாக இருந்து வைத்யம் பயின்று வந்தார். பின்னர் ஸஹஸ்ரயோகத்தைத் தமிழனுவாதமாக்கி ஸ்ரீசர்மா அதில் எழுதிவந்தார். மஹாமண்டலம் 1946ல் தனது பணிகளை விரிவாக்கத் தனிப்பத்திரிகை நடத்த முயன்றபோது இரண்டாவது உலக மகாயுத்த நெருக்கடியால் பத்திரிகை ஆரம்பிக்கத் தயக்கமேற்பட்டபோது வைத்ய சத்திரிகையையே ஸ்ரீ நாராயண அய்யங்கார் அவர்கள் மஹாமண்டலத்தின் பத்திரிகையாக்கி ஆசி அளித்தார். அன்றுமுதல் மஹாமண்டலத்தின் பத்திரிகையாக இது விளங்குகிறது. 1951ல் சென்னையில நடந்த மகாநாட்டில் வைத்திய சந்திரிகையின் நிர்வாஹத்தை ஏற்று இரண்டாண்டுகள் ஸ்ரீராமசர்மா நடத்தினார். அதன்பின் 1967ல் திருச்சியில் நடந்த மகாநாட்டில் மறுபடியும் வைத்ய சந்திரிகை ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். சென்ற பிப்ரவரி இதழுக்கான தலையங்கத்தைத் தனது கடுமையான நோய் நிலையிலும் எழுதி அனுப்பினார். வைத்ய சந்திரிகை வெளியாகும் தினத்தன்றே அவரும் நம்மிடமிருந்து விடைபெற்றார்.

மஹாமண்டலத்தின் நிர்வாஹம் திருச்சிக்கு வந்தபின்னர், மஹாமண்டலத்தின் பொதுக்காரியதர்சி, தலைவர், வைத்ய சந்திரிகை பிரசுரகர்த்தர், உதவி ஆசிரியர், ஆசிரியர் பல்லாண்டு காலம் மஹாமண்டல உபதலைவர் என்றவாறு அவர்கள் புரிந்துள்ள சேவை இணையற்றது.

மஹாமண்டலம் என்றென்றைக்கும் அவரது பணிகளுக்குத் தான் நன்றிக்கடன்பட்டிருப்பதை மறக்காதிருக்கும்.

சிறந்த கர்ம வீரர்

வைத்ய T. S. ஈச்வரன், தலைவர்,
தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலம்மிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே,
நல்லார் குணங்களுரைப்பதுவும் நன்றே,
அவரோடு இணங்கி யிருப்பதுவும் நன்றே.

இந்த வரிசையில் வாழ்ந்து வந்தவர் கரூர் வைத்ய வாசஸ்பதி பண்டித ஸ்ரீ ராமசர்மா அவர்கள் என்ருல், அது முற்றிலும் உண்மை. அவருடன் பழகினவர்கள் அனைவரும் இதை நன்கு உணர்வோம். உலகில் ஒரு ஆயுர்வேத வைத்தியன் எவ்வாறு நல்லவனுக வாழவேண்டும் என்பதற்கு ஸ்ரீ சர்மா அவர்கள் ஒரு எடுத்துக்காட்டு ஏழை முதல் தனவந்தர்வரை எல்லோரும் அவருடைய குணங்களைப் புகழ்ந்து கொண்டே இருக்கிருர்கள். எல்லோருடனும் எளிய முறையில் அவர் பழகி வந்தார்.

ஒரு வைத்தியன் தான் கல்வி கற்கும் காலத்தில் எவ்வளவு ஊக்கத்துடன் கற்கவேண்டும்; பிறகு தொழில் நடத்தும்போது, எந்தப் பண்பாடுகளுடன் நடந்துகொள்ள வேண்டும்; தொழில் அபிவிருத்தித் துறையில், எந்த அளவில் உழைக்க வேண்டும் என்று இவ்வாறு பல விதங்களில் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய அம்சங்கள் பல உண்டு.

அவருடைய உயர்வுக்கு முக்கிய காரணங்கள் அவருக்குத் தன்னுடைய மாதா, பிதா, குரு இவர்களிடம் உள்ள மிகுந்த பக்திதான். இவர்கட்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதில் ஒரு தனித்த இன்பத்தை அனுபவித்தார்.

அவருடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டு 25 வருஷங்களுக்கு மேலாகிறது. ஆரம்ப காலத்தில் நானும் அவரும் சேர்ந்து பல கிராமங்களுக்குச் சென்று திருச்சி ஆயுர்வேத சபைக்கு வைத்தியர்களை அங்கத்தினர்களாகச் சேர்ப்பதில் முயற்சி எடுத்துக் கொண்டோம். எங்களுடைய முயற்சி சில இடத்தில் பலிக்காமற் போனாலும், நான் மனம் தளராதபடி எனக்கு தைரியமும், ஊக்கமும் அளித்து வருவார். எனக்கு மட்டுமல்ல, மற்ற வைத்தியர்களிடம் இதே போன்ற உற்சாக உணர்ச்சியுடன் பழகி வந்தார்.

ஆயுர்வேதத்தின் பெருமையையும், சக்தியையும் பற்றிப் பேசும்போது, அஷ்டாங்கங்களிலும் ஆயுர்வேதம் தனது பூர்ண சக்தியைக் காட்ட இயலும் என்பதை நிரூபணம் செய்வதில் ஆற்றல் மிகுந்தவர். இந்திய வைத்தியத்தை எவரேனும் குறை கூறினால், சற்றும் பொறுக்கமாட்டாது, அதை முற்றிலும் எதிர்த்துப் போராடக்கூடிய ஆர்வம் கொண்டவர்.

அவர் தனது வைத்தியத்தொழிலில் ஓரளவு ஸ்திரமான நிலைமை ஏற்படுத்தியவுடன், தொழிலிலிருந்து தான் ஓய்வெடுத்துக்கொண்டு, மற்றவர்களை அத்தொழிலைத் தொடர்ந்து நடத்துவதற்கு வழிவகுத்துக்கொடுத்து அது சரியாக நடப்பதற்கு நல்ல சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தார். தன்னுடைய வைத்திய ஸந்ததியாருக்கு அவ்வப்போது ஆலோசனைகளை மட்டும் தந்து, வைத்தியத் தொழில் தொடர்ந்து நன்கு நடந்துவர எல்லா ஏற்பாடுகளையும், தான் ஓய்வாக இருக்கும் போதே செய்து கொடுத்து அது நன்கு நடைபெறுவதைக் கண்ணால் கண்டு களித்தார். பரம சாந்தராக இருந்து கொண்டு வைத்திய சாஸ்திரங்களை மேற்கொண்டு ஆராய்ச்சி செய்து கொண்டும், மற்ற இளைய வைத்திய சந்ததியினருக்கு ஆயுர்வேத பாடங்களைக் கற்றுக்கொடுத்தும் தனது கடைசி காலத்தை நிம்மதியான ஒரு சூழ்நிலையில் அமர்த்திக்கொண்டு, உலகிற்கு உபகாரமாக வாழ்ந்த, அந்த புண்ணிய புருஷனைக் காண்பதும், அவருடைய சொல்லைக் கேட்பதும், அவருடைய சிறந்த குணங்களைப் பற்றிப் பேசுவதும் அவரோடு இணங்கியிருந்த காலத்தைப்பற்றி நினைத்துப் பார்ப்பதும் இவை யெல்லாம் நல்லவைகள் என்று காட்டிவிட்டு, அவர் இயற்கை எய்தினார்.

ஸ்ரீ ராம சர்மா அவர்களின் வாழ்க்கை வழியில் நாமும் நடந்து நன்கு வாழ்ந்து நல்லவர்களாவோம் என்ற பிரார்த்தனையுடன் இதை முடிக்கின்றேன்.

எனது நண்பர்

V. B. நடராஜ சாஸ்திரீ, ஆயுர்வேதாசார்ய, திருச்சி.

வைத்தியர் ஸ்ரீ P. S. ராமசர்மா அவர்களுக்கும் எனக்கும் ஸ்நேஹம் - அந்தரங்கஸ்நேஹம் - அளவு கடந்தது. இந்த அதிஸ்நேஹம் இப்பொழுது அவர் சிவலோகபிராப்தியாகிவிட்ட பொழுது என்னுடைய சோகத்தின் அளவையும் மீறச்செய்துள்ளது. ராமசர்மாவின் ஸ்நேஹம் எனக்கு எப்பொழுதும் ஸுகத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது. அந்த ஸ்நேஹமே தான் இப்பொழுது அதிக துக்கத்திற்கும் காரணமாகிவிட்டது. இந்த விபரீத பரிணாமம் ஸ்நேஹத்திற்கு ஆதாரமான புருஷன் மறைந்துவிட்டதால்தான்.

ஸுகம் துக்கம் இரண்டையும் மற்றவரிடம் சொல்லுதல் நல்லது; வெளிப்படச் சொல்லுவதால் ஸுகம் அதிகமாகும், துக்கம் குறையும் என்று சொல்லுவது சம்பிரதாயம். இதையநுசரித்து ராமசர்மாவின் குணகணங்களையும், எங்களிடையே ஏற்பட்ட பழக்கங்களையும் ஓரளவு குறிப்பிடுவதனால் எனது துக்கத்தை ஓரளவு குறைத்துக்கொள்ள முடியலாமோ என்ற பிரத்யாசையில் கொஞ்சம் சொல்லுகிறேன்.

1930ம் வருஷ மத்தியில் எங்களுக்குள் முதல் பரிசயம் உண்டாயிற்று. ஸ்நேஹம் பாச பந்தம் கிரமேண கெட்டியாகிவிட்டது. சிலரிடம் பழகுதல் முதலில் இனிக்கும், பழகப்பழகக் கசக்கும். பிறகு புளிக்கும். எங்களுடைய பழக்கம் அபராண்ஹச்சாயைப் போல் தினே தினே அபிவிருத்திதான் ஆகிற்று வைத்தியத் தொழிலில் ஔஷத நிர்மாணம், வியாபாரம், சிகித்ஸை முதலிய லௌகிகமான அம்சங்களிலும் எங்களை நெருங்க இணைத்து வளர்த்தது தேசாடனங்கள் இருவரும் சேர்ந்தே செய்வோம் லௌகிக விஷயங்களில் எங்களுக்குள் அபிப்ராயபேதம் அணு அளவும் நிகழ்ந்தது இல்லை. வைத்திய சாஸ்திர விஷயங்களில் சர்ச்சைகள் ஏராளமாய் செய்துள்ளோம். இதில் எங்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் தான் அதிகம் என்றுகூடச் சொல்லலாம். ஆயுர்வேத தர்சன மூலாதாரப் பிரமாணங்களில் சிலதில் எங்களுக்கு பரஸ்பரம் மாறுபட்ட அபிப்ராயம்தான் நிலைக்கும் ஆனால் இது எங்களுடைய அந்தரங்க அன்பை அதிகம் அதிகம் வளர்த்

ததே தவிர மாறுதல் கிஞ்சித்தும் இல்லை. இப்படி ராமசர்மா ஸஹிருதய ஸ்வபாவம், பாண்டித்யப் பிரியம், சாஸ்திரத்தில் அபிப்ராய பேதமுள்ளவரிடத்திலும் பூர்ண அபிமானம் உள்ளவர்.

ஸ்ரீ சர்மாவின் பிதா பிரும்ஹஸ்ரீ ஸுப்பிரமணிய சாஸ்திரிகள் நியாய சாஸ்திரத்திலும் அத்வைத வேதாந்தத்திலும் சிறந்த பண்டிதர். பகவத்பாதருடைய பிரும்ஹஸூத்திர பாஷ்யத்தின் பாமதீ வியாக்யானத்தின் ஒரு பகுதிக்கு அரியதொரு வியாக்யானம் ஸ்வதந்திரமாய் எழுதியுள்ளார். இந்த கிரந்தத்தை அச்சிட்டு பிரசாரம் செய்யும் பாக்கியம் சர்மாவிற்கு கிடைத்தது. பெரிய பண்டிதருக்குப் புத்திரன் என்று பரிஹாசமாகச் சொல்லுவதுண்டு, புத்திரன் பிதாவைப்போல் படிப்பாளியாக இல்லாவிட்டால். சர்மாவின் பாண்டித்தியமும் மிக சிலாக்கியமானது. யஜுர் வேதம் பூர்ணமாய் அத்தியயனம், ஸாஹித்தியம் நியாயசாஸ்திரங் களில் கிரந்தம் எழுதும்படியாக விசேஷ பிரஞ்ஞை, கடினமான அப்பிரஸித்தமான விருத்தங்களிலும் சுலோகங்கள் கவனம் செய் யும் ஸாமர்த்தியம், ஜோதிஷ சாஸ்திரத்தில் பரிசயம் எல்லாம் ஒருங்கே உடையவர்.

இந்நாளில் வேதசாஸ்திர பாண்டித்தியம் ஸுகவாழ்க்கைக்கு பரம சாதனமாயுள்ள பொருள் சேகரிப்புக்கு உகந்ததாக இல்லாத தால், ஐசுவர்யம் அளிக்கும் ஆயுர்வேதத்தை முறைப்படி பயின்ருர் இவருக்கு ஆயுர்வேத குரு பண்டிதசிரேஷ்டர் நெரூர் நாராயண அய்யங்கார் ஸ்வாமி அவர்கள்.

சர்மா பிதிரு பக்தியிலும், குரு பக்தியிலும் ஒரு ஆதர்ச புருஷர். தனது வித்யா குருக்கள் அனைவரிடத்திலும் அவர்களு டைய குடும்ப ஸந்ததிகளிடத்திலும் அன்புடன், ஆதரவு பலவித மான உதவிகள் அனவரதமும் செய்து வந்தார். வைத்திய சாஸ் திரத்தில் ஆயுர்வேத குரு ஸ்ரீ நாராயண அய்யங்கார் அவர்க ளுடைய அபிப்பிராயத்திற்கு மாறியுள்ள அபிப்பிராயம் உள்ளவர் களை சர்மாவிற்கு அறவே பிடிக்காது, அவ்வளவு அதிசயமான பக்தி. அய்யங்காருக்கும் சர்மாவிடம் பிரேமை அபாரம் சர்மா ஸகல ஜகத்குருவான ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதி சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களிடம் அபாரமான அந்தரங்கபக்தி கொண்ட வர்.

ஆயுர்வேத வித்யை, சர்மா மூலம் பொது ஜனங்களுக்கு விசேஷமாய் சிசுக்களுக்கு வியாதி சமனம் செய்து விசேஷ உதவி யளித்தது. பொது ஜனங்கள் சிசுக்கள் மூலம் சர்மாவிற்கு கீர்த்

தியையும் புண்ணியத்தையும் ஏராளமான ஐசுவர்யத்தையும் ஆயுர்வேதமே அளித்தது. ஆயுர்வேதம் கொடுக்கும் ஐசுவர் யத்தை தனது சொந்த ஆடம்பர ஸுக வாழ்விற்கு செலவழிக்கா மல், தான் எளிய வாழ்க்கையையே நடத்திக்கொண்டு, சாஸ் திரீயமான, தானதர்மங்களிலேயே விசேஷமாய் விநியோகம் விநியோகம் செய்தார்.

சர்மா ஆயுர்வேதத்தின் மஹத்துவத்தை உணர்ந்து, அதனுல் விசேஷ பிரயோஜனத்தையும் அடைந்துள்ளதால், அந்த சாஸ்திரத்தின் பிரசாரத்திலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். ஆயுர்வேத சம்மேளனங்கள், ஸம்பாஷா பரிஷத், பத்திரிகை பிரசுரம் எல்லாம் நடத்தினுர். வைத்திய சகோதரர்களுடன் ஒற்றுமையாக சேர்ந்து செய்யும் மனப்பான்மை. தனது தனயர் களில் சிலரையும் ஸஹோதரர்களில் சிலரையும் ஆயுர்வேதமே பயின்று ஆயுர்வேதத் தொழிலிலேயே ஈடுபடுத்தினுர். பொருள் வருமானம் நிரந்தரமாய் நீடித்து தொடர்ந்து வரும்படியாக "கட்டி மருந்து" முதலிய பேடெண்டு மருந்துகளை வியாபாரத் துறையில் விரிவாகவும் ஸ்திரமாகவும் ஸ்தாபித்துள்ளார்.

தனது ஐஹிக ஸம்பத்துகள் ஸகலமும் ஸ்ரீ கந்தபகவானு டைய அநுக்கிரஹப் பிரஸாதம்தான் என்று வெளிப்படையாகச் சொல்லுவார். ஸதா மனதில் ஸ்கந்த தியானம், ஷஷ்டி விரதம் பூஜைகளை விசேஷமாய் செய்வது வழக்கம்.

ஸ்ரீ சர்மா வித்வான், தனிகர், தானதர்மஸதாசாரசீலர், பண்டிதப்பிரியர், ஸரளர், ஆயுர்வேதாபிவிருத்தி கார்யங்களில் ஈடுபாடுள்ளவர், இப்படிப் பல சிலாக்கிய குணமுள்ளவரின் வியோகம், அன்னுரின் குடும்பத்திற்கு பொது ஜனங்களுக்கு, ஆயுர்வேத வைத்திய ஸமூகத்திற்கு தனிப்பட்ட முறையில் எனக்கு எளிதில் ஆருத துயரம்.

சிவம் பிரஜாயை, சிவமஸ்து மஹ்யம்.

A Self made man!

A rare specimen where Saraswathi and Lakshmi bid with each other to dwell. His Gurubhakthi and devotion made him what he was.

— T. V. Jayarama Sastri.

நினைவில் நிலைத்தவர்

வைத்ய V. S, வெங்கடஸுப்ரமணிய சாஸ்திரி, தஞ்சை.

இப்புவியில் நற்குணங்களும், நன்னடத்தை, அறிவாற்றல் முதலிய எல்லா நற்பண்புகளும் ஒருங்கே அமையப்பெற்ற மஹா புருஷன் யார்? என வால்மீகி முனிவர் நாரத மஹரிஷியிடம் வினவினர். தாரக மந்திரத்தைப் பெயராகக் கொண்ட ஸ்ரீராமனே அத்தகைய பெருமை வாய்ந்தவனென நாரதரால் பதில் கூறப் பெற்றது. இது திரேதாயுகத்துச் சரித்திரம்.

இன்று சிறிதும் ஆடம்பரமின்றி உயிரினங்களிடம் கருணை, பொறுமை, எல்லோருக்கும் உதவுதல், குருபக்தி, சாஸ்திரங்களில் ஆழ்ந்த அறிவு, ஸஹவைத்தியர்களிடம் தூய நட்பு. மத ஸம்பிர தாயங்களில் தீவிரமான பற்று இவ்வாறு வைத்திய வாசஸ்பதி ப்ரம்மஸ்ரீ ராமசர்மா அவர்களது நற்குணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம் பழகிய ஒவ்வொருவருடைய மனத்திலும் அவர் நிலையான இடத்தைப் பெற்றவர்.

அவரது பெருமைக்கு எடுத்துக்காட்டாக எனது பரிசயத்தில் நிகழ்ந்த இரண்டொரு விஷயங்களை மட்டும் குறிப்பிடுகிறேன்.

பிரம்மஸ்ரீ சர்மா அவர்களுடன் எனக்குக் கடந்த 37 வருடங்களாகப் பரிசயம் உண்டு திருச்சி ஆயுர்வேத ஸபாவின் ஆண்டு விழா ஒன்றில் அவருடன் நானும் பங்குபெற்றபோது பரிசயம் தொடங்கியது. உடன்பிறவாவிடினும் குஹனிடம் ஸ்ரீராமன் காட்டியதுபோல் அன்றுமுதல் என்னிடம் ஸகோதரப் பரிவைப் பொழியத் தொடங்கிவிட்டார், ஸ்ரீசர்மா. சிறிதளவேயாயினும் மலையென குணத்தைப் போற்றும் அவரது உயர்பண்பை அன்று முதல் காண வாய்ப்புக் கிடைத்தது.

நோயுற்றவர்க்கு அருமருந்து போன்றும் ஸாதாரணமாக எல்லோருக்கும் உற்ற நண்பராகவும் பூணும் விரத தினங்களில் கடுமையான கட்டுப்பாடுகளுடனும், பெரியோர்களுக்குப் பணிவிடை புரிகையில் சிறந்த சீடனாகவும், எளியோர்க்கு உற்ற உறைவிடமாகவும், சாஸ்திர சர்ச்சைகளில் கலந்துகொள்ளும் சமயங்களில் நேர்மையுள்ள போர்வீரனாகவும் அவர் பல கோணங் களில் காக்ஷி அளித்திருப்பது என் மனக்கண்ணில் தோன்றிக் கொண்டே இருக்கிறது.

சாஸ்திர சர்ச்சைகள் நடைபெறுகையில் சிற்சில சமயங்களில் ஸித்தாந்த நிலைகள் விஷயத்தில் கருத்துவேற்றுமை தோன்றுவ துண்டு. அந்நிலைகளிலும் எதிராளிக்கு உரிய மதிப்பை கண்யத் துடன் வழங்குவதும் சர்ச்சை முடிந்தபின் முன்னிலும் அதிகமான அன்பைப் பொழிவதும் என்றவாறு வேறெவரிடமும் காணக் கிடைக்காத தனிப்பெருங் குணம் அவரிடம் ஒளிர்வதை என் சொந்த அனுபவத்தில் பல சந்தர்ப்பங்களில் கண்டிருக்கிறேன். இத்தகைய சர்ச்சைக் கூட்டங்களைத் தாமே பெரும் பொருட் செலவுசெய்து நடத்தி மகிழ்ந்திருக்கிறார்.

தம் ஆயுர்வேத ஆசிரியர் பிரம்மஸ்ரீமன் நாராயண அய்யங்கார் அவர்களிடம் இவர் கொண்டிருந்த குருபக்தியைக் கண்டு வியக் காதவர் இல்லை. சாஸ்திர சர்ச்சைகளில் தம் ஆசிரியருக்கு உறு துணையாக நின்று, அவர்களது மொழிகளை பக்தியுடன் கேட்டு, அத்தக் கருத்தையே பலமாக ஆதரித்து வாதிட்ட சந்தர்ப்பங்களை மறக்கவே முடியாது மஹாமண்டல மஹாநாட்டில் தலைமை தாங்க நேர்ந்த ஒருசமயம் ஸபையில் தம் ஆசிரியரை ஸாஷ்டாங்க மாக வணங்கி, ஆசிபெற்று தலைமை உரையைத் தொடங்கியதை இப்போது நினைத்தாலும் புல்லரிக்கிறது.

பூர்ணமாக வேதத்தை அத்யயனம் செய்திருப்பதுடன், வேதம் அறிந்த பெரியோர்களிடம் அவர் காட்டிவந்த அன்பும், ஆதரவும் அளவிடமுடியாது. நிரத்தரமாக வேதபாராயணத்திற் கும், அத்யயனத்திற்கும் பல இடங்களில் வழிவகை செய்திருப்பது அவரது ஸாத்வீக ஈடுபாட்டாலான நற்செயல்களில் ஒன்று.

வேதாந்த சாஸ்திரத்தில் கரைகண்ட மஹானின் தவப் புதல்வராக உதித்து அவ்வாறே கல்விச் செல்வமும் பெற்ற இவர் அன்னார் இயற்றிய அரிய வேதாந்த உரையைக் கடமை உணர்ச்சியுடன் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். இவ்வாறு தந்தை மகனுக்கும் மகன் தந்தைக்கும் தம் தம் கடமைகளை மிக உயர்வாக ஆற்றியிருப்பது பெரிதும் கொண்டாடத்தக்கது.

விருந்தோம்பலில் ப்ரம்மஸ்ரீ சர்மா அவர்களுக்கு நிகர் அவரேதான். விருந்தினருக்கு எல்லா வசதிகளையும் தாமே கவனித்து உபசரிப்பதிலேயே பரம திருப்தி கொள்வதை அனுப வித்தவர்களே உணரமுடியும். தம் வீட்டிற்கு வந்த விருந்தினரை சிறப்பாக உபசரித்தது ஸாதாரண விஷயம். வெளியூர்களில் தாமே பிறர் வீட்டிற்கு விருந்தினராகப் போக நேர்ந்த சமயங் களிலும்கூட என்போன்றவர்களைத் தம்முடன் அவ்வீடுகளுக்கு உரிமையுனும், நம்பிக்கையுடனும், அன்புடனும் அழைத்துச் சென்று விருந்தோம்பிய பெருமையை அவரிடம் மட்டிலுமே

காணமுடிந்தது. திருவனந்தபுரத்திலும், புதுக்கோட்டையிலும், மதுரையிலும் இவ்வாறு நிகழ்ந்த என் அனுபவம் இப்போதும் பசுமையாகவே இருக்கிறது.

அறிஞர்களையும் ஸஹ வைத்தியர்களையும் சந்திக்க நேரும் சமயங்களில் எல்லாம் தம்மை மறந்து பரம ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டு சாஸ்திர விஷயங்களைப்பற்றி மகிழ்ச்சியுடன் நேரம் போனதை அறியாமல் அளவளாவத் தொடங்கி விடுவார்.

முருகப்பெருமானிடம் மட்டற்ற பக்தி கொண்டவர். ஒரு சமயம் வெளியூரில் தனியிடத்தில் இரவு சயனித்திருக்கையில் படுக்கையில் தம்மைத் தழுவியவாறு ஒரு ஸர்ப்பம் இருப்பதைக் கண்டு முருகனைத் தொழுதவுடன் தம்மை விட்டு அகன்றதாகவும், அதுவரை முருகனிடம் சாதாரணமாக இருந்த பக்தி இந்நிகழ்ச்சிக்குப்பின் பலமாக வேரூன்றியதாகவும் அவர் சொல்லிக்கேட்டிருக்கிறேன். ஷஷ்டி விசேஷ தினங்களில் மௌன விரதமும் மேற்கொண்டிருந்தார். முருகன் பெருமையைப் பாடிப் பல கவிதைகளை இயற்றி வெளியிட்டிருக்கிறார். சொல்லலங்காரம் பொருளலங்காரங்களும், பலபந்த விசேஷ அமைப்புகளும் கருத்துச்செறிவும் கொண்ட ஒரு மஹா காவியமாக, முருகனுடைய லீலைகளைத் தொகுத்துப் புதிதாக இயற்றியுள்ளதை நான் அண்மையில் ஸந்தித்த சமயம் படித்துக் காண்பித்தார். அதையும் விரைவில் அச்சிட்டு வெளியிட உள்ளம் கொண்டுள்ளதாகவும் சொன்னார்.

தர்க்க ஸங்கிரஹம் என்ற தர்க்க சாஸ்திர நூலுக்கு கம்பீரமான விரிவுரை இயற்றி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். மற்ற சாஸ்திரங்களிலும் அவர் பெற்றிருந்த ஆழ்ந்த அறிவுக்கு அதை அளவுகோலெனக் கொள்ளலாம்.

அவர் கடமைகளைச் சிறிதும் பழுதின்றி நிறைவேற்றும் கர்ம வீரர். பலன் கருதாதவர். வைத்திய சந்திரிகையின் ஆசிரியராக நற்பணியை மூச்சுள்ளளவும் புரிந்தார். ஆவி பிரிவதற்கு முன் தினத்திலும், பத்திரிகைக்காக, ஆசிரியர் தலைப்புரையை படுக்கையிலிருந்தவாறே சொல்லி எழுதச்செய்தார். அம்புப் படுக்கையில் இருந்தவாறு பீஷ்மர் எல்லோரும் உய்வதற்காக நல்லுரைகளை வழங்கிச் சென்றதை இது நினைவூட்டுகிறது. கருத்து செறிந்த இந்நல்லுரை எல்லோரும் மனப்பாடம் செய்து கொள்ளவேண்டியதாகும்.

சாஸ்திர ஸம்பந்தமான சர்ச்சைகளில் பங்கெடுத்துக் கொள்ளும் நிலையில், தாம் ஒரு கட்சியைச் சேர்ந்து வாதாட

நேர்ந்த சமயம், அந்நிலையில், நடுநிலையுடன் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்ற முடியாதோ என அஞ்சி, வைத்திய சந்திரிகையின் ஆசிரியர் பதவியையும் ராஜிநாமா செய்ய முன் வந்தார். கடமையுணர்ச்சிக்கு வேறு உதாரணம் தேவையில்லை.

அவரது எல்லாப் பெருமைகளுக்கும் சிகரம் போல் அமைந்தது அவரது ஸஹோதரவாத்ஸல்யமாகும். அன்பும் பண்பும் மிக்க ஸஹோதரர்கள் அவரிடம் கொண்டிருந்த மாருத பக்தி ஒன்றே அவரது அந்த ஸஹோதரவாத்ஸல்யத்திற்கு ஈடானது. ஸ்ரீராமபிரானது மொழிகளைக் கேட்ட அளவில் இளையபிரான் அதற்கே அடிபணிந்தது போன்றே ராமானுஜர்களான இவர்களும் செயல்பட்டு வந்திருப்பது கண்கூடு.

தம் அரும்புதல்வர்களையும் தம் போல் ஆதர்சச் செல்வங்களாக அமைக்கும் நோக்கத்துடன் நேர்ந்த போதெல்லாம் அவர்களுக்குத் தாமே சாஸ்திர போதனைகளைச் செய்து வந்திருக்கிருர்.

அவரது நினைவுகள் நம்மை நல்வழிப்படுத்தும்.

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

"பெரியவருடன் 15 நிமிடங்கள்"

வைத்ய N வைத்யநாதன், புதுக்கோட்டை.

1966-ம் வருடம், ஸ்ரீரங்கத்தில் ஆயுர்வேத மஹா நாடு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்பொழுது, இடைவேளையில் சுமார் $1\frac{1}{2}$ மணிக்கு "சர்மா உங்களை கூப்பிடுகிருர்" என்று என்னிடம் வந்து சொல்ல, நான் சென்று அவரைப் பார்த்தேன். சர்மா அவர்கள் என்னிடம் என் பெரியவரைப் பற்றி (காலஞ்சென்ற டாக்டர் P. விஸ்வநாதன் அவர்கள்) விசாரித்து பிறகு, நான் வருத்தப்படுவதைக் கண்டு, "வேதா, தைரியமாக இரு. உனக்குள்ள வேதனை எனக்குத் தெரியும் கடவுளுடைய சோதனை அப்படி. மனதைத் தளரவிடாதே ஆஸ்பத்திரியைத் தொடர்ந்து நடத்திக்கொண்டுவா. உனக்கு எந்தவிதமான ஸஹாயம் வேண்டுமானுலும் நான் செய்து தருகிறேன். நான் இருக்கிறேன். நீ கொஞ்சம்கூடக் கவலைப்படாதே". எனக்கூறி, எனக்கு தைரியமும், ஊக்கமும் அளித்தார். சுமார் நான் 15 நிமிடங்கள் தான் பேசிக்கொண்டிருந்தேன் என்று நினைக்கிறேன். அந்த சமயம், அந்த மகான் கூறிய அறிவுரைகள், உபதேசங்கள், கணக்கிலடங்காதவை ஒரு சிலதைத்தான், நான் மேலே கூறியிருக்கிறேன். பச்சை மரத்தில் அடித்த ஆணிபோல் இன்றும் பசுமையாக என் மனதில் அவை பிரகாசிக்கின்றன. அவர் இன்று மறைந்துவிட்டார். ஆனுல், அவரால் கூறப் பட்டவைகள் யாவும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவைகள் ஆகும். அப்பேர்பட்ட உத்தம குணமுள்ள புருஷரை, அன்புள்ளம் கொண்ட நெஞ்சை இனிமேல் காண முடியுமா? கேள்வி தொடர்கிறது? .. ... விடை தெரியவில்லை. இந்த சமயத்தில், எனக்கு.

ஸுலபா : புருஷா லோகே ஸததம் ப்ரியவாதிந :
அப்ரியஸ்ய ச பத்த்யஸ்ய வக்தா ச்ரோதா ச துர்லப :.

என்ற சுலோகம் ஞாபகத்தில் வருகிறது தனக்குமட்டும், என்று இல்லாமல், பிறர்க்கு அறிவுரை கூறுவதிலும், அவர்களுடைய வாழ்க்கையைப் பசுமையாக செய்வதிலும், அவருக்கு நிகர், அவரே! ஒவ்வொருதரமும் நான் அவரை பார்க்க சந்தர்ப்பம் ஏற்படும்பொழுது. என்னிடத்தில் "வேதபாராயணம் நன்கு நடைபெறுகின்றதா", அதை விடமால் நடத்திக்கொண்டுவா", அது உனக்கு நன்கு வழிகாட்டும்". என்ற வார்த்தை இன்றும் அவர்

எதிரில் நின்று கூறுவதுபோல் தோன்றுகிறது. தனக்கு, இளையோரானாலும், படித்தவரானாலும், படிப்பில்லாதவரானாலும் அவர்கள் எல்லோரையும் ஒருங்கே கூட்டிச் செல்லும் தனித் திறன் படைத்தவராயிற்றே அவர்! எங்கே அப்படிப்பட்ட பண்புள்ளவரை இனிக்காண்பேன்!. தாய், தந்தையர்களிடத்திலும், குருவினிடத்திலும், சகோதரர்களிடத்திலும் அவர் வைத்திருந்த, மரியாதையையும், பக்தியையும், பாசத்தையும், இங்கு கூறுவதா? அல்லது முருகா, முருகா, என்று அனவரதமும் அந்த முருகப்பெருமானை மனமாரப்போற்றி, வாயாரக் கூப்பிட்டதை இங்கு கூறுவதா? எதைக் கூறுவது, அல்லது எதை எழுதுவது?

எங்கள் ஆயுர்வேத மஹா மண்டலத்தின் ஒப்பற்ற தலைவர் ஆயிற்றே அவர்!! ஆயுர்வேத வைத்யத்திற்குக் கிடைக்கப்பெற்ற அரும்பெரும் பொக்கிஷம் அல்லவா அவர்!! அப்பேர்பட்டவரை இழந்து தவிக்கும் எங்களிடையே அந்த முருகன் அருளால் அவர் மீண்டும் தோன்றுவார் என்று நினைத்து மனச்சாந்தி அடைகிறேன்.

குரு வாழ்க! குரு நாமம் வாழ்க!! குருவே துணை!!!

FORM IV (See Rule 8)

Statement about ownership & other particulars about newspaper

VAIDYACHANDRIKA

1.	Place of Publication	... Tiruchirapalli-2.
2.	Periodicity of its Publication	... Monthly
3.	Printer's Name	... V S Mani
	Whether Citizen of India	... Indian
	Address	... Girha Press, E. B. Road, Trichy-2.
4.	Publisher's Name	... T. S. Iswaran
	Whether Citizen of India	... Indian
	Address	... 27, Chinnakadai St. Tiruchi-2.
5.	Editor's Name	... T. S. Iswaran
	Whether Citizen of India	... Indian
	Address	... 27, Chinnakadai St., Tiruchi-2
6	Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital,	... Tamilnad Ayurveda Mahamandalam, 18, Chinnakadai Street, Tiruchirapalli -2.

I, T. S. ISWARAN hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated: 7—3—1972. Signature of Publisher; (Sd). T. S. ISWARAN.

அஞ்சலி

வைத்ய V. S. பஞ்சநத சர்மா, திருச்சி.

ஒவ்வொரு ஜீவனும், பிறவி எடுப்பது, மரிப்பதற்கு அல்ல. அதிலும் விசேஷமாக பகுத்தறிவு படைத்த மனிதப் பிறவி எடுத்தலால் எவ்விதமும் மறு பிறவி எடுக்காமல் இருக்க, கடவுள் கட்டளைகளான வேதங்களுடையதும் திரிகால ஞானிகளான ரிஷிகளுடையதும் உபதேசங்கள்படி நாம் நடப்பதற்கே.

பிராமணர்களுக்கு சில கடமைகளை வேதங்கள் உபதேசிக்கின்றன. அவைகளாவன : சந்தியாவந்தனம், ஹோமம், தேவதா பூஜைகள், உபவாசம், ஜபம், அதிதி சத்காரங்கள், சிராத்தம், பக்தி இது போன்ற பல. காலம் சென்ற பெரியோர் P. S. ராமசர்மா அவர்கள் மேற்படி தருமங்கள் ஒன்றிலாவது குறைவு பட்டவரல்லர். ஒவ்வொன்றையும் கவனத்துடனும், பக்தியுடனும் செய்து வந்தார் என்பதற்கு அடியில் காணும் உதாரணங்களே சான்ருகும்.

நாஸ்திகமே நிறைந்துள்ள இக்காலத்திலும் தன் தகப்பனுரின் திதியை ஒரு வருடம் முடிய தீட்சை எடுத்துக் கொண்டு, நித்ய சிராத்தமாக செய்த ஒரு கடமை வீரர். அதிதி சத்காரம் என்று எடுத்துக் கொண்டால், இவர் வீட்டில் அறுசுவை உண்டி உண்டு, மனம் களித்து இவர் கையால் செலவுக்கும் பணம் வாங்கிக் கொண்டு சென்ற எவ்வளவோ அந்தணர்கள் இன்றும் உளர். தன் தாய், தகப்பனுர், ஆசாரியர், குரு இவர்களிடமும் அளவு கடந்த பக்தி இப்பெரியார்க்கு உண்டு. ‘ மாத்ரு தேவோ பவ, ஆசாரிய தேவோ பவ, அதிதி தேவோ பவ என்ற வேத வாக்கியப்படி இக்காலத்தில் நடந்து காண்பித்தவர் அவர் ஒருவர்தான். வேலூருக்கு சிகிச்சைக்காக செல்லும் போது கூட தன் தாயாரை நமஸ்கரித்து உத்தரவு கேட்டுக் கொண்டு தான் சென்ருர். நெரூர் கிராமத்தில் தன் தாயாருடன் தங்கி தன் தாயாருக்கு உதவி செய்து கொண்டு நிம்மதியான சூழ்நிலையில் தன் எஞ்சிய வாழ் நாளைக் கழிக்க திட்டம் போட்டு வீடும் வாங்கிக் கட்டி முடித்து விட்டார், ஆனுல் அதற்குள் இயற்கை அவரை தன் வசம் இழுத்து விட்டது. தகப்பனுரிடமும் தனக்கு சிறிதளவு வித்யை வைத்யம், ஜோதிஷம், தர்க்கம் சாகித்யம் எதுவாக இருந்தாலும் சொல்லிக் கொடுத்த குருவிடமும் அளவு கடந்த பக்தி

படைத்தவர். தன் குருவின் விருப்பத்திற்கோ, கொள்கைகளுக்கோ மாறுபட்ட எந்த விஷயமானாலும் அது சரியாக இருந்தாலும் அதைச் கொஞ்சமும் கூசாமல் மறுப்பவர். தன் ஒவ்வொரு குருவின் குடும்பத்திற்கும் இவர் செய்து வந்த உதவிகள் கணக்கிலடங்கா. அதிதிகளுக்கும், யாசகர்களுக்கும், பெயருக்கும் புகழுக்கும் ஆசைபடாமல் பக்தியுடனும் உள்ளன்புடனும் பொருள் வாரி வழங்கிய வள்ளல் தன் மக்கள் கல்யாணத்திற்கும் மற்ற காரியத்திற்கும் இவரிடம் பொருளுதவி பெற்ற ஏழை எளியவர் எவ்வளவோ பேர் இன்று உளர்.

நாம் சிலரைப் பார்ப்போம். பூஜைக்கு படடோபமாக உட்கார்ந்து கொண்டு கை மணியடிக்க வாய் மந்திரம் ஓத, கண் ஒரு புறம் பார்க்க மனம் பல கோணங்களில் அலைந்து திரியும். "மனது நில்ப சக்தி லேக போதே மதுர கண்ட பூஜை சேயு" என்று தியாகையர்வாள் ஸ்ரீ ராமபிரானிடம் முறையிடுகின்றார். அதுபோல் இல்லாமல் மனதை அடக்கி ஏகாக்கிர சித்தத்துடன் கடவுளை வழிபட்டவர் காலஞ்சென்ற ஸ்ரீ P. S ராமசர்மா அவர்கள் ஆவார். சிறுவயதில் மிகவும் ஏழ்மையான நிலைமையில் இருந்து தன் உழைப்பாலும் சாமர்த்தியத்தாலும் உயர்ந்து தனவானானர். 75 சதவிகிதம் கல்வி இருக்கும் இடங்களில் செல்வம் இருப்பது இல்லை. ஆனால் நிறைந்த கல்வி ஞானமும் நிரம்பிய செல்வமும் இப்பெரியவரிடம் தான் இருந்தது.

தேடிய பொருளை ஒன்று தானம் செய்தல் வேண்டும் அல்லது தான் நன்ருக அனுபவித்தல் வேண்டும். இவ்விரண்டும் இல்லாமல் ஒரு காசும் செலவு செய்யாமல் இருந்தால் அந்த பொருள் வீணாவதுடன் ஊர்பேர் அறியாத எவனாவது ஒருவன் அடித்துச் செலல நேரிடும். அவ்விதமின்றி தான் ஈட்டிய பொருளை தானமும் செய்து தானும் நன்கு அனுபவித்து திருப்தி அடைந்தவர் காலம் சென்ற பெரியவர் P. S. ராமசர்மா அவர்கள்.

நான் அவரை சந்திக்குர் சமயங்களில் அவர் எனக்கு கூறும் ஒவ்வொரு வார்த்தைகளும் உபதேசங்களாகவே நான் கருதியிருக்கிறேன். என்னிடம் அவருக்குள்ள வாத்சல்யத்தை சொல்லி முடியாது இளம் வைத்யன் என்பதோடு தன் நெருங்கிய நண்பனின் புதல்வன் என்பதும் காரணமாக இருக்கலாம். நாம் தினமும் சில புத்தகங்களை படிக்கிறோம் ஆனால் அதிலுள்ள சில கருத்துக்கள் நம் மனதில் பதிவதில்லை. அனுபவசாலிகளான சில பெரியோர்கள் வாய் மூலம் கிடைக்கும் சில உபதேசங்கள் நாம் படித்த புத்தகங்களில் இருந்தாலும் பசுமரத்து ஆணி போல்

நம் மனதில் பதிவதை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். நெரூரில் ஒரு சமயம் என் மாமனூர் வீட்டிற்கு பெரியவர் ராமசர்மா வந்திருந்தார். அவ்வமயம் நானும் அங்கு இருந்தேன். பெரியவர்கள் இருவரும் பேசும் சமயம் நான் இடையே பேசக்கூடாது என்ற காரணத்தால் மௌனமாக இருந்தேன். உடனே ஏனப்பா நீ பேசாமல் இருக்கிருய்? என்ன சௌக்கியமா என்று என் உடல் ஆரோக்கிய நிலைமை தொழில் நிலைமை முதலியவற்றை கேட்டுவிட்டு "பூர்வாபிபாஷீ சுமுக: சுசீல: கருணு மிருது:" என்று வாக்படர் சொல்லுகின்ஞர் அல்லவா? அதுபோல கலகலப்பாகவும், நன்ருகவும், முதலில் பேசுபவனுகவும் இருக்கவேண்டும் என்று சொன்னது என் நினைவை விட்டு அகலவில்லை. இதுபோல் நான் அவரை சந்திக்கும் பல சமயங்களிலும், பல அனுபவங்களை விளக்கியுள்ளார். ஒவ்வொன்றையும் நான் தெரிவிப்பது என்பது இயலாத காரியம். உத்தமமான ஆரோக்யம் தான் பெரியவருக்கு இல்லாமல் போய் விட்டது. இப்பிறவியில் மனதறிய தான் எந்த பாவமும் செய்யவில்லை என்றும் பூர்வ ஜென்ம வினைப்பயனே வியாதியாக என்னை பாதித்து வருகிறது என்றும் சில சமயங்களில் என்னிடம் கூறி அதைப் பொருட்படுத்தாதிருப்பதைக் கண்டதுண்டு. உடன் என் உடல் நிலையையும் விசாரித்து அதற்குப்பரிகாரம் சொல்லக்கூடிய பெருந்தகை உள்ளவர்.

பல நல்ல குணங்களை உடைய இப்பெரியவர் மேலும் சில காலங்கள் உயிரோடு இருந்தால் தன் மூச்சாகப் போற்றிய ஆயுர்வேத வைத்யம் செழித்தோங்க உதவியாக இருக்கும். வைதிக உலகத்தில் நிறைந்த புருஷராகவும் ஆதர்ச மனிதராகவும், இருந்து மேலும் மேலும் வைதிக காரியங்கள் நல்ல முறையில் நடக்க உதவியாக இருப்பார்.

"தேவோபி தம் லங்கயிதும் ந சக்த:"

என்றபடி விதியை யார்தான் வெல்ல முடியும். பல நல்ல குணங்களும், பொருளைவிட அதிகமாக சேர்த்த புண்ணியங்களும் இப்பெரியோரை இறைவனடி சேர்த்திருக்கும் என்பதை நாம் நிச்சயமாக நம்பலாம். இப்பெரியோரின் ஆத்மா விடுதலையடைந்து சாந்தசொரூபியான பிரும்மத்தில் லயிக்க எல்லாம்வல்ல சர்வேஸ்வரியை உளமார பிரார்த்திக்கிறேன். ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

———

நண்பர் ஸ்ரீ P. S. ராமசர்மா

(த. வீ. ராதாகிருஷ்ண சாஸ்திரி)

வைத்ய வாசஸ்பதி பண்டிட் ஸ்ரீ P. S. ராமசர்மா நம்மை விட்டு பிரிந்து விட்டார். எனக்கு இது ஒரு பேரிழப்பு. ஒரு உண்மையும் வாத்யல்யமும் நிறைந்த நண்பர் மறைந்துவிட்டார். வெறும் படாடோபமில்லாமல் படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறிப் பந்துக்களையும் நண்பர்களையும் அறவணைத்து வாழ்ந்து காட்டியவர் இப்பொழுது இல்லை. இந்த சூன்யத்தை யாரும் எளிதில் நிரப்பிவிட முடியாது.

நன்றிக்கடனை முதலில் நான் ஆற்றவேண்டும். ஜீவ தசையில் இருக்கையில் இதை நான் சொல்ல விடமாட்டார். ஆனால் இப்பொழுது அரூபமாகி விட்டவரைப்பற்றி அவர்களால் ஏற்பட்ட நன்மைகளை நவில்வது (பல ஆக்கியானம்) நம் கடமை. எனது இரண்டு குமாரர்கள் கல்ஈரல் வீக்கத்திலிருந்து நன்கு குணமடைந்து நல்ல ஸ்திதியில் இன்று இருக்கிறார்கள் என்றால் அது ஸ்ரீ ராமசர்மாவின் சக்தி சஞ்சீவியின் மகிமையே என்று கூறுவேன். பல ஆயிரக்கணக்கில் இவ்வாறு கூறுகிறவர்கள் தென்னாட்டில் இருக்கிறார்கள் என்றாலும் நானும் இதை கூறுவதற்கு விசேஷ காரணம் இருக்கிறது. எனது கடைசி புதல்வனுக்கு சக்தி ஸஞ்சீவி சிம்பிள் மருந்துக்கு மேலே காம்ப்ளிகேடட் மருந்துக்களையும் கொடுத்தும் வ்யாதி கட்டுக் கடங்காதிருந்த நிலையில் நண்பர் சர்மா அவர்களுக்கு விவரமாக கடிதம் எழுதினேன். சில நாட்களில் ஒரு கரிய உப்பை வேண்டிய அளவில் எனக்கு அனுப்பி உபயோகிக்கும் முறையையும் விவரமாக எழுதி இருந்தார். ஒரு தந்தைக்கிருக்கிற தவிப்பு சினேகிதரின் புதல்வனிடம் காட்டி விவரம் எழுதி இருந்தார் என்றால் மிகைப்பட கூறுதல் இல்லை. அந்த சிரத்தையின் விளைவு வ்யாதி கட்டுக் கடங்கி விரைவில் குணமும் கிடைத்தது. அதற்கு சில நாட்கள் கழித்து ஆயுர்வேத மண்டல மஹாநாட்டிற்கு (கும்பகோணம் மஹாநாடு) சென்ற இடத்தில் ஸ்ரீ சர்மாவை சந்திக்கிறேன். ஒரு லேஹ்ய பொட்டணத்தை எனக்களித்து என் குமாரனுக்கு டானிக்காகக் கொடுத்துவரச் சொன்னார். கூடவே இலேகியம் செய்யும் முறையும் எழுதிகொடுத்து என் குமாரனுக்கு தொடர்ந்து கொடுக்கவும் மற்றும் எனக்கு வேண்டபட்ட வியாதியஸ்தர்களுக்கும் செய்து கொடுக்க அனுமதியையும் வலுவில் உகந்தளித்தார்.

அதனால் பலர் என்மூலம் பயனடைந்தார்கள். நானும் சிநேகிதருடைய அந்தரங்க அபிமானத்தை மதித்து லௌகீத சம்பிரதாய முறையில் இந்த முறையை பிறருக்கு என் மூலம் பிரகாசிக்கவில்லை. சக்தி சஞ்சீவிகளின் முறைகளை ஊகிக்கக்கூட முயற்சிக்கவில்லை. இது தொழில் ரகசியத்திற்கு நாம் அளிக்க வேண்டிய மதிப்பு.

அடுத்தபடியாக ஸ்ரீ சர்மா அவர்களிடம் தவருமல் காண்பது அவருடைய ஆழ்ந்த குருபக்தி. பகட்டுக்காக பக்தி இல்லை. யோக க்ஷேம கடிதங்களில் கூட அவர் குருவை பற்றி 'எனக்கு குருஸ்வாமி' என்று விவரிப்பார். ப்ருஹ்ம ஸ்ரீ நெரூர் நாராயண அய்யங்கார் அவர்களின் சிஷ்யர் என்ற பாக்கியம் ஸ்ரீ ராமசர்மாவிற்கு பெரும் துணை. அவருடைய ஞானம், காரிய சித்தி, புகழ், ஜனங்களிடம் வாத்ஸல்யத்துடன் பழகும் தன்மை, வதீகசரத்தை எல்லாம் அந்த குருபக்தியின் விளைவே எனலாம்.

1923-ம் ஸு மார்ச்சு மீ திருச்சி டௌன்ஹாலில் 5-வது திராவிட வைத்திய சம்மேளனம் நடைபெற்றது. அப்பொழுது கேட்டது ஸ்ரீ நாராயண அய்யங்கார் அவர்களின் ஒரு அக்கிராஸனர் உரை என்று சொல்வது போதாது. அவருடைய சிம்மக் குரல் என வேண்டும், ஆயுர்வேதத்தின் மஹிமையை குறித்து அவர் எழுப்பிய சிம்ஹ நாதம் அது. அதிகாலை அங்கு வரவேற்க குழுமி இருந்த சித்த, ஆயுர்வேத. யுனானி வைத்தியர்களின் கூட்டம் மிகப்பெரியது, சிறந்ததும்கூட. வரவேற்புத் தலைவர் மாமேதை ஸ்ரீ பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள். கூடியிருந்த வைத்தியர்களில் டாக்டர் லக்ஷ்மிபதி, ஸ்ரீ கனகரத்தினம், பண்டிட் S. S. ஆனந்தம் முதலியவர்கள் முக்கியமானவர்கள். நாட்டு வைத்தியத்திற்கு உத்ஸாகம் கரை புரண்டு ஓடிய அந்த மஹாநாட்டின் தலைவரின் சிஷ்யர் ஆகும் பாக்கியம் நம் சர்மா அவருக்குக் கிடைத்த பெரும் பாக்கியம்.

10 வருடங்கள் ஓடிவிட்டன. திராவிட வைத்திய மண்டலம் பெரும் துயிலில் ஆழ்ந்துவிட்டது. ஆனால் அதை மறைந்த ஒன்ருக விட்டுவிடக்கூடாது என்று சதா சிந்தனையிலிருந்தி பல பெயர்களை நாடி ஆவ .. செய்ய துடித்து பத்து வருடங்கள் தட்டினாலும் உளம் நளராமல் காரியத்தில் கண்ணுயிருந்து மஹா மண்டலத்தை மறுபடியும் இயக்கவைக்கத் தொண்டாற்றிய பெருமை ஸ்ரீ D. நாராயண அய்யரைச் சாரும்.

அவரும் ஸ்ரீரங்கம் டாக்டர் V. சுப்ரமணியமும் முயன்று தீர்க்கதரிசனத்துடன் திருச்சி ஆயுர்வேத சபையைத் துவக்க

பாடுபட்டு ஜயம் பெற்றூர்கள். இந்த ஜில்லா சபைக்குத் தலைவராக ஆயுர்வேதாசார்ய டாக்டர் V. B. நடராஜ சாஸ்திரிகளை ஒப்பவைத்து என்னை காரியதரிசியாகப் பணியாற்றவும் வழி காட்டியவர்களுக்கு வைத்தியர்கள் சார்பில் நான் நன்றிசெலுத்துகிறேன். அன்றுமுதல் தொடர்ந்து ஆயுர்வேத மண்டலத்தை மீண்டும் செயல்படவைக்க திருச்சி ஆயுர்வேத சபை முயற்சி செய்தது. டாக்டர் P. S. ராமசர்மா இந்த சபைக்கூட்டங்களில் கலந்துகொண்டு மிகவும் ஊக்கத்துடன் உழைத்தார். தொடர்ந்து 6-வது திராவிட வைத்திய சம்மேளனம் கூட்டப்பட்டதும் பிறகு நாளதுவரையில் ஆயுர்வேத மண்டலம் செயலாற்றுவதும் வைத்தியர்களனைவரும் அறிந்ததே. இந்த ஆயுர்வேத மண்டலத்தை ஊக்குவதில் ஸ்ரீ சர்மா அவர்கள் காரியதரிசியாகவும் தலைவராகவும் பலமுறைகள் உழைத்திருக்கிறூர். அப்பொழுது நிதிநிலை சரிந்தபோதெல்லாம் ஸ்ரீ நடராஜ சாஸ்திரிகளுடன் ஸ்ரீ சர்மாவும் சேர்ந்து நிதியளித்து கைங்கர்யத்தை நீடிக்கச் செய்தார்.

மேலும் ஸ்ரீ சர்மாவின் குரு ஸ்ரீ நாராயண அய்யங்கார் தன் சொந்தத்தில் நடத்திய ''வைத்திய சந்திரிகை'' யை மண்டலத்தின் பத்திரிகையாக மாற்றித்தந்ததுமுதல் இந்த நாள்வரையில் அதைப் பேணி வளர்த்துவந்தவர்களில் ஸ்ரீ சர்மா பெரும் பங்கு கொண்டுள்ளார் என்பதற்கு அவருடைய குருபக்தி பெரிதளவு காரணம். குருவிற்கு அழிவு கிடையாது. அதே வழியில் உழைக்கின்ற வைத்தியர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக நம்மிடை இருந்து இன்று ஸ்தூலத்தை மறைத்துக்கொண்ட ஸ்ரீ ராம சர்மாவிற்கும் அழிவு இல்லை. அவர் ஈடுபட்டிருந்த வைத்திய சந்திரிகை, திருச்சி ஆயுர்வேத சபை, திருச்சி ஆயுர்வேதிக் யூனியன், தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம் எல்லாம் நன்கு வளர அவர் தோன்றுத் துணையாக இருப்பார் என்பதில் ஐயம் இல்லை.

ஸ்ரீராம சர்மாவுடன் நெருங்கி தொடர்பு கொண்டுள்ள திருச்சி வைத்தியர்களுக்கு ஒரு ப்ரார்த்தனை. தமிழ் நாட்டில் ஆயுர்வேதத்தின் ஆணிவேர் திருச்சி மாவட்டத்தில்தான் இருக்கிறது என்பதை மறக்காதீர்கள். உங்களுடைய சகாவாக, ப்ரதிநிதியாக ஸ்ரீ சர்மா பணியாற்றினர். தொடர்ந்து அந்த கைங்கர்யத்தை ஏற்றுசெய்ய சர்வேஸ்வரன் உங்களுக்கு ஆற்றலை அளிப்பான் என்ற நம்பிக்கையுடன் ஸ்ரீ சர்மாவின் ஆன்மா சாந்தியடைய ப்ரார்த்திப்போம்.

———

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

இம்ப்காப்ஸ்

பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருந்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.

லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20

IMPCOPS

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:

4/186, மௌண்ட்ரோடு, மதருஸ்-2 போன்: 86520

48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.

27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, கல்தாஸ்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP./747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27. Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.